**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2024 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 3-ம் தேதி பிரதிவாதி தரப்பு சாட்சி பி.வா.சா.1-ன் வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி எஸ்.விஜய் அழகிரி, பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

அ.வ.எண்.774/2015

பி.வா.சா.1 வசந்தி

<u>குறுக்குவிசாரணை தொடர்ச்சி வாதிகள் தரப்பில்</u>

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 12ல் 1ம் பிரதிவாதியும், அவரது மக்கள்களான 2 முதல் 5 பிரதிவாதிகளான நாங்களும் தாவா சொத்தின் உரிமையாளர்களாக இருந்து பொதுவில் அனுபவித்து வருவதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். தாவா 1, 2 அயிட்ட சொத்துக்களுக்குண்டான ரீ.ச.எண்.378/2 காலையில் இதுவரை எவ்வித வில்லங்க விவகாரமும் ஏற்படுத்தப்படவில்லை என்றால் சரிதான். 09.09.1992 தேதியிட்ட **பி.வா.சா.ஆ.3** பத்திரம் தாவா 1, 2 அயிட்ட சர்வே எண்களுக்கு சம்மந்தப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கில் வாதிகள் ஏழு அயிட்ட சொத்திற்கு வழக்கு போட்டிருக்கிறார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 13ல் எட்டாவது அயிட்ட சொத்து என்று சொல்லியிருப்பது தவறு என்றும், வழக்கில் ஏழு அயிட்ட சொத்துக்கள் தான் கொடுக்கப்பட்டிருப்பதால் நான் பிரமாணவாக்குமூலத்தில் சொல்லியிருக்கும் விவரம் தவறு என்று சொன்னால் சரியல்ல. 30.11.2005ம் தேதியில் ஒரு சிவக்குமார் தாவா எட்டாவது அயிட்ட சொத்தை கிரையம் பெற்று அனுபவித்து வருவதாக சொல்லியிருப்பது தவறு என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் தட்சிணாமூர்த்தி, ராஜகோபால் மற்றும் சிவக்குமார் ஆகியோர்களை தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்று சொல்லியுள்ளேன் ஆனால் அதை நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை, கூடுதல் எதிர்வழக்குரை ஆகியவற்றில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். ராமசாமிகவுண்டர் இறந்த பிறகு எனது அப்பாவும், பெரியப்பா

சுப்பராயகவுண்டரும் எழுத்துபூர்வமாக பிரித்துக்கொண்டார்களா என்றால் இல்லை. சுப்பராயக்கவுண்டரும், குழந்தைசாமிக்கவுண்டரும் 1997ல் வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்துகொண்டதாக முதல்விசாரணை பிரமாணவாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரத்தை நான் ஏற்கனவே தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை, கூடுதல் எதிர்வழக்குரை ஆகியவற்றில் சொல்லவில்லை என்றால் நான் சொல்லவில்லை. நாங்கள் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.432/2014 ல் எனது அப்பாவும், பெரியப்பாகவும் 1997ல் வாய்மொழியாக பிரித்துக்கொண்டதாக சொல்லும் விவரத்தை அந்த வழக்கில் நான் சொல்லவில்லை என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. ராமசாமிக்கவுண்டரின் பெண்மக்களான பெரியபாப்பாயம்மாள், சின்னபாப்பாயி, சரசாயி ஆகிய மூவரும் அவர்களுடைய சகோதரர்களான சுப்ராயகவுண்டருக்கும், கொழந்தைசாமி கவுண்டருக்கும் எழுத்துப்பூர்வமான விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்திருக்கிறார்களா என்றால் அது எனக்கு தெரியாது எனது அத்தைகளுக்கு பணம் கொடுத்ததாக சொன்னார்கள். எனது அத்தைகளுக்கு பணம் கொடுத்த விவரத்தை நாங்கள் தாக்கல் செய்த வழக்கிலோ, இந்த வழக்கில் நாங்கள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை, கூடுதல் எதிர்வழக்குரை நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம் ஆகியவற்றில் சொல்லவில்லை என்றால் சரிதான். நாங்கள் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.432/2014 ல் எனது அப்பாவுக்கும், மற்ற இரண்டு சகோதரிகளும் நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை செல்லவில்லை என்றால் சரிதான். தட்சிணாமூர்த்தி, ராஜகோபால் மற்றும் சிவக்குமார் ஆகியோர்கள் பெயரிலுள்ள கிரையப்பத்திரலும், நான் தாக்கல் செய்த அ.வ.எண்.432/2014 லும் இந்த வழக்கு வாதிகள் தரப்பினர்கள் கிடையாது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.432/2014 வழக்கானது நானும், எனது அப்பா மற்றும் எனது சகோதரிகளுக்குள் மோசடியாக ஏற்படுத்திக்கொண்ட வழக்கு என்றால் சரியல்ல. அதனால் அந்த வழக்கு தீர்ப்பு இந்த வழக்கு வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. 2014ல் நான் வழக்கு தாக்கல் செய்யும்போது சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்றும், பொது சொத்துக்கள் என்று சொல்லித்தான் வழக்கு தாக்கல்

செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் என் அப்பாவின் சொத்திற்கு தான் வழக்கு தாக்கல் செய்தேன். இந்த வழக்கு 2015ம் ஆண்டிலேயே தாக்கல் செய்யப்பட்டிருப்பதால் இந்த வழக்க காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டிருப்பதாக சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல. வாதிகளுக்கு சட்டப்படி கிடைக்கக்கூடிய பாகத்தை கிடைக்கக்கூடாது என்பதற்காக பொய்யாக எதிர்வாதம் செய்து பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகளுக்கு தாவாப்படி தீர்ப்பு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**